# இலங்கைப் பாராளுமன்றம்
# பதவி வெற்றிடம்

---

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள கீழ்காணும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கல்வித் தகைமை / தொழில்சார் மற்றும் அனுபவம் ஆகியன தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆம் 14 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக**, **'பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே'** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். (மேலும், இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்).

**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) (வெற்றிடங்கள் 01)**
**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) (வெற்றிடங்கள் 02)**
**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) (வெற்றிடங்கள் 08)**

**1. சம்பள அளவுத்திட்டம்**

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 47, 340 – 3 x 755/ 13 x 1,030 – 62,995/- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 110, 000 /= ஆகும்).

**2. வயதெல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்பொழுது அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

**3. கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

கீழ்காணும் )அ(, )ஆ( ஆகியவற்றின் கீழ் எந்தவொரு விதத்திலாயினும் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவரும், அனுபவத்தை உடையவருமான விண்ணப்பதாரர்கள் மேற்குறித்த பதவிற்கு விண்ணப்பிக்கலாம்.

)அ( அங்கீகரிக்கப்பட்ட ஒரு பங்கலைக்கழகத்திலிருந்து அல்லது பட்டத்தை வழங்கும் நிறுவனமான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்/சிங்களம்) பதவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள அல்லது ஆங்கில மொழியை, பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள அல்லது தமிழ் மொழியை, பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், ஆங்கில அல்லது தமிழ் மொழியை தமது ஒரு பாடமாக பெற்றிருத்தல் வேண்டும்.**

அத்துடன்

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், கணித பாடத்தில் திறமைச் சித்தியும் மற்றும் பட்டம் பெறாத மொழியில் திறமைச் சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளை கொண்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் ஒரு அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கற்பித்தல், உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் வெகுஜன ஊடகம் போன்ற மொழியை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் இரண்டு வருடங்களுக்கு குறையாமல் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு தடையின்றி உரைபெயர்க்கக்கூடிய ஆற்றலுடையவராய் இருத்தல் வேண்டும்.

)ஆ( க.பொ.த. )உயர் தரம்( பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது புதிய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், கணித பாடத்தில் திறமைச் சித்தியும் மற்றும் பட்டம் பெறாத மொழியில் திறமைச் சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள மொழியிலும் மற்றும் ஆங்கில மொழியிலும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் திறமைச் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.**

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளைக் கொண்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் ஒரு அரசாங்க நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கற்பித்தல், உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் வெகுஜன ஊடகம் போன்ற மொழியை அடிப்படையாகக் கொண்டவொரு துறையில் ஐந்து வருடங்களுக்கு குறையாமல் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு தடையின்றி உரைபெயர்க்கக்கூடிய ஆற்றலுடையவராய் இருத்தல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு நடைமுறை**

விண்ணப்பகாரர்கள் சமகால உரைபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு தொடர்பான பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**4.1** (i) செயன்முறைப் பரீட்சை

(ii) எழுத்துமூலப் பரீட்சை

(iii) நேர்முகப் பரீட்சை

நேர்முகப் பரீட்சையில் பின்வரும் தகவுதிறன்களைக் கருத்திற்கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| i | மேலதிகக் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| ii | மொழித் திறன் |
| iii | சேவை அனுபவம் |
| iv | சமகால உரைபெயர்ப்புத் திற்னகள் மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் செயல்திறன்கள் |

**குறிப்பு:** மேற்குறித்த 3 (அ) அல்லது (ஆ) இன் கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பிரிவுக்குரிய ஊடக மொழிகளுக்கு இடையில் சமகாலத்தில் உரைபெயர்க்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், சமகால உரைபெயர்ப்பு அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

**5. சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை தீர்மானத்திற்கு அமைய நிர்ணயிக்கப்படும் என்பதற்கு அமைவாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதியம் உரித்துடைய பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் / தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்படும்.

**6.** கீழ்காணும் சான்றிதழ்களின் **(மூலப்பிரதிகளல்ல)** பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்

)இ( தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்

)ஈ( தொழில் சார் அனுபவச் சான்றிதழ்கள்

7. அரசாங்க / மாகாண அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த திணைக்கள / நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

8. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளைப் பிரயோகிப்பது இந்தப் பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

9. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விபரம் பொய்யானது என ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், அவர் தகுதியற்றவராவர். நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்களத் தலைவர்கள் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்ற செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2025 ஆம் ஆண்டு ........ மாதம் ..... ஆம் திகதி